

# நான் கண்ட காஞ்சிப் பெரியவர்



## பரிதிமதி


பேராசிரியர்.முனைவர். இரா. இரவிச்சந்திரன்,
முக்கிய மருத்துவ இயற்பியல் நிபுணர்,
ஓமான் பேரரசர் மருத்துவமனை,
**மஸ்கட்**, சுல்தானேட் ஓமான்.

பெங்களூர் விலாசம்:
302, ஸ்ரீராம், டி.எஸ்.மேக்ஸ் **'ஸ்பர்ஷ்'**,
516, முதல் குறுக்குத்தெரு, கெம்பே கௌடா லே அவுட்,
கத்திரிகுப்பே, பிஎஸ்கே 3வது விரிவு, பெங்களூர்-85.


இறைவன் தனது அடியவர்களுக்கு அருள்புரிய நேராக வருவதில்லை. ஆனால் அவரை நாம் உணரமுடியும். நாம் நேராகப் பார்த்து உணர்பவர்கள் நம் குருவானவார்கள். யார் நமக்கு உபதேசம் பண்ணுகிறார்களோ அவர்களே குருமார்கள். ஆனால் உலகத்திற்கே குருவானவர்கள் ஒவ்வொரு சமயத்திலும் தோன்றுகிறார்கள். ஆதிசங்கரர்ற்கு பிறகு சிவபெருமானே மறுபிறப்பு எடுத்ததாக நாம் உணர்ந்தது பரமாச்சார்ய பெரியவரைப் பார்த்தபின் தான். அவரைப் பலமுறை தரிசித்த பேறு பெற்றவர்கள் ஏராளம். அதில் ஒருவனான அடியேனுக்கு அவரிடம் எந்த முறைகளில் வியப்பான அநுபவங்கள் கிடைத்தன என்பவைகளைத் தொகுத்து எழுதலாம் என்று முயற்சிக்கிறேன். அவரே என் நினைவுகளில் நின்று அருள் பாலிப்பார் என்று விருப்பத்துடன் இந்த தொகுப்பை எழுதுகிறேன். அவர் ஒரு கலங்கரை விளக்கம், அவரே எண்ணங்களின் வழிகாட்டி. உட்கருத்தாய் இருக்கும் நாதன். நாதன் நாமங்களை நாம் கூறும்போது அவர்கள் நம் நாவில் நிற்கிறார்கள். நாம் செய்யும் கருமங்களின் வெற்றிக்கு உறுதுணையாய் இருக்கிறார்கள் என்பதை, இந்தத் தொகுப்பைப் படிக்கும்போது நன்றாக உணரலாம். அதிசயங்கள் எல்லா இடங்களிலும் அவ்வப்போது நிகழ்ந்து கொண்டு தானிருக்கின்றன. அவைகள் நடக்கவேண்டும் என்று இறைவன் சித்தம் இருக்கும் போது, அவை நம் மூலமாக நடப்பவையாக நாம் திரும்பிப் பார்க்கும் போது, அவைகள் குருவானவரின் ஆசியினால் இருக்குமோ என்று தோன்றுவதால், அவரே அருளியதாக நாம் ஏற்று நன்றி செலுத்துகிறோம்.

**குரு பிரம்மா: குருர் விஷ்ணு: குருத் தேவோ மஹேஸ்வர:**
**குரு சாஷாத் பரப் பிரும்மா: தஸ்மை ஸ்ரீகுருவே நம:**

யாதுமாகி நின்ற பரம ஆச்சாரியர் எனக்கு அருளிய அதிசயங்களை நினைவு கூறும் இத்தருணங்களை என்னுடைய மகத்தான வாழ்க்கைப் படிக்கற்களாக நான் நினைத்து அவருடைய கருணானந்தத்தில் திளைக்கிறேன். பக்திப்பரவச நிலையை மிகவும் உணர்கிறேன்.

**ஞான ஆனந்தமயம் தேவம் நிர்மலஸ் படிகாக்ருதம்**
**ஆதாரம் ஸர்வவித் யானாம் ஹயக்ரீவம் உபாஸ்மஹே.**

**பரிதிமதி**

# நான் கண்ட காஞ்சிப் பெரியவர்

## மஹா பெரியவாளின் அறிமுகம்

நான் அப்பொழுது இலாலாப்பேட்டையில் படித்துக் கொண்டிருந்த காலம். இரண்டாம் பாரம் (7ம் வகுப்பு) படித்துக் கொண்டிருந்த சமயம். 1962ம் வருடமென்று நினைவு. கருப்பத்தூரில் குண்டு கிருஷ்ணன் வீட்டில் மஹாபெரியவாள் அவருடைய பரிவாரங்களுடன் தங்கியிருந்தார். பட்டாபிராமய்யர் வீடு என்றால் எல்லோருக்கும் தெரியும். காஞ்சி மடத்தின் பல்லக்கு நின்றிருந்தது. புதுப் பெரியவாள் ஜெயேந்திர சரஸ்வதியவர்கள் மிகவும் சின்னவராயிருந்தார். ஒருமாதம் கருப்பத்தூரில் தங்கி இருந்தார்கள். அகண்ட காவிரியில் விடிகாலையில் இரண்டு பெரியவாளும் வெறும் மணலில் உடல் தேய்த்து ஸ்நானம் செய்வார்கள். பூஜைகள் முடிந்தவுடன் தீர்த்தம் போட்டு எல்லோருக்கும் பிரசாத மதிய உணவு போடுவார்கள். எனது தந்தையார் புகைவண்டி நிலைய வேலைநேரம் முடிந்தவுடன் பெரியவாளைத் தரிசனம் செய்யக் கூட்டிப் போயிருக்கிறார். நாங்கள் நடந்துதான் போனோம். இப்பொழுதுகூட நான் இரயிலில் திருச்சி போகும் போதெல்லாம் பெரியவாளை நமஸ்கரித்த காலத்தை நினைவு கூர்வேன். அப்பொழுது எட்டு கிரகங்கள் ஒரே இராசியில் வந்தன என்று நினைக்கிறேன். இலாலாப்பேட்டையில் எல்லோரும் திருஞான சம்பந்தரின் 'வேயுறு தோளிபங்கன் விடம் உண்ட கண்டன்' என்ற கோளறு பதிகம் படித்தோம். பிற்காலத்தில் நான் சோதிடம் படிக்கும்போது அறிந்து கொண்டேன் அந்த நாட்களை. எட்டு கிரகங்கள் 1962ம் வருடம் பிப்ரவரித் திங்கள் 3, 4, 5, தேதிகளில் எட்டு கிரகங்கள் ஒரே இராசியில் வந்தனவாம். நான் அப்பொழுது 7 ஆவது வகுப்பில் படித்துக் கொண்டிருந்தது ஞாபகம் வருகிறது.

பிறகு திருமணம் ஆகும் வரை பெரியவாளைத் தரிசனம் செய்ய எனக்கு சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. நாங்கள் சேலம் பகுதியைச் சேர்ந்தவர்கள் ஆனதினால், சிருங்கேரி சங்கராச்சார்யாளிடம் தான் அப்பா திருமணப் பத்திரிக்கை அனுப்பியிருந்தார்கள். அவர்களிடமிருந்து தான் பிரசாதம் வந்தது. ஆனால் என் மனைவி வீட்டில் காஞ்சி பீடத்தைச் சேர்ந்தவர்கள். அதனால் மாமனார் வெங்கட்டராமய்யர் திருமணத்தில் முதலில் எனக்கருளிய குங்குமப் பிரசாதம் காஞ்சிப் பெரியவாளிடமிருந்து வந்திருந்தது. எனது மாமனாரும் பெரியவாளுடைய அதீத பக்தராவார். முதலில் நானும், மனைவி உஷாவும் தேனிலவுக்கு சென்றது திருப்பதிக்கே. பிறகு அவள் என்னிடம் கேட்டது, நாம் காஞ்சீபுரம் போகலாமா என்று. நான் திருக்காஞ்சிக்குப் போகவேண்டும் என்ற நெடுநாளைய அவா நிறைவேறியது அப்பொழுது தான். திருக்கச்சி நம்பி தெருவில் உஷாவின் அத்தங்காள் நாகலட்சுமி சுப்ரமணியன் இருந்தார்கள். ஓரிக்கையில் பெரியவாளைப் பார்க்க அவர்கள் அனுப்பி வைத்தார்கள். சைக்கிள் ரிக்ஷாவில் தான் போனோம்.

திரு வரதராசப்பெருமாள் ஆலயத்திற்குப் போய், பிறகு பெரியவாளைப் பார்க்க ஓரிக்கைக்குப் போனோம். அன்று ஞாயிற்றுக்கிழமை. இருந்தாலும் அதிகமாக பக்தர்கள் கூட்டமில்லை. பெரியவாள் செம்பருத்திப் பூமாலை தரித்து, ஜெபம் செய்துகொண்டிருந்தார். சிறிய சாளரம் மூலமாகத் தான் தரிசனம் கொடுப்பார். சிறிது நேரம் காத்திருந்தபின், அவருடைய முகதரிசனம் கிடைத்தது. தட்சிணாமூர்த்தியின் கோலத்தில் பெரியவாளின் சிவதரிசனம் எனக்குக் கிடைத்தது. நானும் என் மனைவியும் நமஸ்கரித்தோம். அவருடைய ஒளிமிகுந்த கண்களும், தவக்கோலமும், அவருடைய சிரத்தின்பின் இருந்த சோதிவட்டமும், பரமாச்சாரியாராகவும், லோக குருவாகவும் அவரை எனக்கு அறிமுகப் படுத்தின. அன்றிலிருந்து, அவர் தனது சமாதிநிலையடையும் வரை நான் அவரை நினைக்காத நாட்களில்லை என்றே சொல்லவேண்டும்.

பிறகு நான் வேலூரில் இருககும்போது நவராத்திரி சமயம். பெரியவாள் கலவையில் தங்கியிருக்கிறார் என்று அறிந்தோம். நானும் என் மனைவியுடனும் குழந்தை லாவண்யாவுடனும் ஆற்காடு சென்று கலவை சென்று லோக குருவைப் பார்த்து வந்தோம். கலவை காஞ்சி பீடத்தின்

முந்தைய ஆசார்யர்களின் சமாதிகளிருக்கும் ஒரு புண்ணிய ஸ்தலமாகும். பாலாற்றின் வடகரையில் அமைந்துள்ள இடம். நவராத்திரி பூஜை முடிந்து பெரியவாள் தீர்த்தம் கொடுத்தார். நமஸ்கரித்துப் பின்பு மதிய உணவு அருந்தினோம்.

**பரமாச்சாரியரைப் பற்றி நான் அறிந்தவை**:

அவர் பாரததேச முழுவதும் தேச சஞ்சாரம் பாதயாத்திரையாகவே சென்றது, பல பக்தர்களின் அநுபவங்கள் இவைகளையும், பெரியவாளின் அறிவுரைகளையும் நான் நிறைய படித்திருக்கிறேன். பரணீதரன் (ஸ்ரீதர் ஆனந்தவிகடன்) அவர்பற்றி தான் நேரில் கண்டு எழுதிய கூற்றுக்களை நான் மனதில் எண்ணி, இப்படி ஒரு மகான் புருஷோத்தமனாக வாழ்ந்த காலகட்டத்தில் நாமும் வாழ கடவுள் அருள்கிடைத்ததே என்றும் பலமுறை நினைத்திருக்கிறேன். அவர் துங்கபத்திரை நதிக்கூடலில் கர்நூல் திருத்தலத்தில் நடத்திய அற்புதங்களைப் பலர் நேரிலே சொல்லிக்கேட்டிருக்கிறேன். மஹாராஷ்டரா மாநில, சதாரா நகரத்தில் அவர் நிர்மாணித்த உத்திரத்தில்லை ஆலயத்தைக் கண்டபோது, அவரின் இறைத்தொண்டை நினைத்து வியந்திருக்கிறேன். அவருடைய ஒரேவார்த்தையில் எவ்வளவு பணம் செலவு செய்து பொன்னம்பலத்தை அமைத்திருக்கிறார்கள். சோழ மன்னன் அமைத்த ஆலயத்தைப் போன்றே நான்கு வாயில்கள். ஒவ்வொரு கோபுரத்தையும் முறையே ஒவ்வொரு முதன்மந்திரிகள் செலவு செய்து அமைத்திருக்கிறார்கள். திரு. எம்.ஜி.இராமச்சந்திரன், என்.டி. இராமராவ், இராமகிருஷ்ண ஹெக்டே, என்ற எல்லா ராமர்களும் வாயில்கள் அமைத்து, நடராச மூர்த்தியை வழிபாடு செய்யவைத்ததெல்லாம் பெரியவாளின் அனுக்கிரஹமன்றி வேறு வகையில் சாத்தியக்கூறே அல்ல.

**என்னுடைய மேல்படிப்பு Ph.D Neuro Biophysics**:

நான் பெங்களூரில் வேலைக்குச் சேர்ந்தது பெரியவர் அருளினால் தான். மிகவும் உயர்ந்த பதவி, மிகவும் சிறிய வயது. பொறுப்புகள் அதிகம். என்னுடைய வேலூர் வேலை அநுபவத்தினால் கிடைத்த பதவி. அதற்காகப் பலமுறை நான் கடவுளுக்கு நன்றி கூறியிருக்கிறேன். பெரியவர் அருளால் எனக்கு மேல்படிப்புக்கும் (Ph.D Neuro Biophysics) நரம்பியல் விஞ்ஞான நிலையத்தில (National Institute of Mental Health & NeuroSciences) இடம் கிடைத்தது. அரசாங்க ஆணையுடன் ஆராய்ச்சி செய்ய அனுமதியும் கிடைத்தது. ஆராய்ச்சிக்காக இரண்டு வருடங்கள் பெங்களூரிலும், தலைநகர் டில்லியிலும் வேலை செய்ய இறைவன் அருள் கிடைத்தது. மனித மூளையில் புற்றுநோய் பற்றி ஆராய்ச்சி செய்ய அணுசக்தி மருந்தக விஞ்ஞானக் கழகத்திலும் (INMAS), அகில இந்திய மருத்துவக் கழகத்திலும் (AIIMS) படிப்பைத் தொடர்ந்தேன். எத்தனையோ இடையூறுகளையும் நான் கடந்து ஆராய்ச்சி செய்ய எனக்கு பேராசிரியர் வினய் ஜெய்ன் வழிகாட்டினார். 1990ம் வருடம் மார்ச் திங்களில் நான் பெங்களூர் வந்து என்னுடைய கித்வாய் மருத்துவக் கழகத்திற்கே திரும்பி வந்தேன். எனக்கு 7 வருடங்கள் ஆராய்ச்சி செய்து முடித்திருந்தாலும், என்னிடம் ஆராய்ச்சி முடிவுகள் கையில் இருந்தாலும், ஆராய்ச்சிக் கட்டுரையை பெங்களூர் பல்கலைக்கழகத்திற்குக் கொடுக்க என்னுடைய பேராசிரியர் அனுமதிக்கவில்லை.

பிறகு இரண்டு முறை எனது மாமனார் என்னை காஞ்சிபுரம் அழைத்துச் சென்றிருந்தார். நாங்கள் இருவரும் சைதாப்பேட்டை சென்று, அங்கிருந்து தாம்பரம் வழியாக பேருந்தில் செல்வோம். பெரியவாளைத் தான் நான் நேரில் பார்த்து மௌன மொழியில் பிரார்த்தித்துக் கொண்டேன். 1991ல் எனக்கு ஒரு உத்வேகம் வந்தது. மஹாவீரர் பிறந்த தினத்தன்று, நான் டில்லிக்குத் தொலைபேசிமூலம் தொடர்பு கொண்டு, என்னுடைய பேராசிரியரிடம் நான் ஆராய்ச்சிக் கட்டுரையை பல்கலைக்கழகத்திற்குக் கொடுத்துவிடுகிறேன் என்று சொல்லிவிட்டேன். எப்படியோ சிரமப்பட்டு 15 நாட்களில் கட்டணம் செலுத்தி, NIMHANS Institute ல் ஆராய்ச்சிக் கட்டுரையை (Thesis) கொடுத்துவிட்டேன். இன்றைக்குக் கூட எப்படி இவைகள் அன்று நடந்தன என்பது ஒரு

புதிராகவே இருக்கிறது. அதற்குப் பிறகு டில்லி போன போது ஆராய்ச்சிக் கட்டுரைப் பிரதியை என்னுடைய பேராசிரியரிடம் கொடுத்தேன். ஆராய்ச்சிக் கட்டுரையில் ஒரு பிரதி அமெரிக்காவில் தேசிய நல விஞ்ஞானக் கழகத்தில் ( National Institute of Health, Bethesda, USA ) பேராசிரியர் கோபால ராவ் என்பவருக்கும், மற்றொரு பிரதி சண்டிகர் முதுநிலை மருத்துவ விஞ்ஞான ஆராய்ச்சிக் கழகத்தில் (Post Graduate Institute of Medical Education and Research) (PGIMER) பேராசிரியர் ஆர். ஆர். ஷர்மா என்பவருக்கும் தேர்வு செய்வதற்காக அனுப்பப் பட்டது. தேர்வு பரிசீலனை சமர்ப்பிக்கப்பட்ட கடிதம் பெங்களூர் பல்கலைக்கழகத்திற்கு 4 மாதங்களில் வந்துவிட்டன. ஆனால் சண்டிகர் பேராசிரியருக்கு ஆகாய ஊர்திக்கு பயணச்சீட்டு கொடுக்காததால், நேர்முகத்தேர்வு நடக்காமல் காலதாமதம் ஆகியது. அப்பொழுது ஒருமுறை நான் காஞ்சீபுரம் போய், என்னுடைய ஆராய்ச்சிக் கட்டுரைப் பிரதியை மடத்தில் மூன்று பெரியவர்களிடத்திலும் காண்பித்தேன். மகா பெரியவாள் சிலப்பக்கங்களைத் தடவிப்பார்த்தார். ஜெயேந்திரப் பெரியவாள் என்னப்பா, இதனால் மனுஷாளுக்குப் பிரயோஜனம் உண்டா? என்று கேட்டார். பாலப் பெரியவர் ஆராய்ச்சிக் கட்டுரையில் இருந்த படங்களையெல்லாம் ஒன்றொன்றாகப் பார்த்தார்.

நான் சென்னைக்குத் திரும்ப வந்தபோது, என் மாமனாரின் நண்பரிடம் நான் உரையாடலில் எனக்கு நேர்முகத்தேர்வு நடப்பதில் காலதாமதம் ஆகிறதே என்று வருத்தப்பட்டேன். அப்பொழுது அவர் சொன்னார். என்னால், இந்த தாமதம் ஏன் என்று சொல்லத் தெரியவில்லை. ஆனாலும் ஒரு வழி எனக்குத் தோன்றுகிறது. அதைச் செய்து பாருங்களேன் என்றார். அவர் சொன்ன உபாயம் என்னவென்றால், என்னை ஒரு சிவாலயத்திற்குப் போய் 108 குடங்கள் நீர் அபிஷேகம் செய்யவேண்டும், அது தான் நான் செய்யவேண்டிய வழிமுறையாகும் என்பதே அது. நான் அந்த ஞாயிற்றுக்கிழமையே அந்த வேண்டுதலைச்செய்து முடித்தேன். பன்னார்கட்டா சாலையில் மாம்பழச் சந்தை போடும் இடத்திற்கருகில் இருந்த சந்திரமௌலீஸ்வரருக்கு அந்த வேண்டுதலை நான் செய்து வணங்கிக் கொண்டேன். அதே சமயம் சீர்திருத்தப் பள்ளியில் இருக்கும் வித்யா கணபதிக்கு வெள்ளிக் கவசம் செய்து போடுவதாகவும் நேர்ந்து கொண்டேன். அந்த வாரம் ஒரு விந்தை நடந்தது. நான் டாக்டர். அனந்தா, கித்வாய் புற்றுநோய்க் கழக இயக்குநரைப் பார்ப்பதற்காக காத்திருந்தேன். 4 மணியளவில் அப்பொழுது டில்லியிலிருந்து திரு. கப்பூர் அவர்கள் வந்து, அவரும் இயக்குநரைப் பார்க்கவேண்டும் என்றார். அந்த வேளை அவர், உங்களுடைய Ph.D Degree என்ன ஆயிற்று என்று கேட்டார். அதற்கு நான், எல்லாம் ஒரு ஆகாய ஊர்தி பயணச்சீட்டினால் தடைப்படுகிறது என்றேன். உடனே திரு. கப்பூர், அதை நானே வாங்கிக் கொடுத்துவிடுகிறேனே என்றார். இது பல்கலைக்கழக விஷயங்கள். அவ்வளவு எளிதல்ல என்றேன். அதற்கு அவர், எதற்கும் இதுபற்றி நானே அனந்தா டாக்டரிடம் பேசுகிறேன் என்றார். பேசி, அவரிடம் அனுமதியும் வாங்கிவிட்டார். சண்டிகரிலிருந்து ஆகாயவிமான பயணச்சீட்டும் வாங்கிக் கொடுத்து விட்டார். உடனே இது தெரிந்தவுடன் எனது பேராசிரியர் டில்லியிலிருந்து பெங்களூர் பல்கலைக் கழகத்திற்கு தேர்வுநாளையும் குறித்து கடிதம் எழுதிவிட்டார். திரும்பவும் எனக்கு குழப்பம் ஏற்பட்டது. NIMHANS Biophysics Department பேராசிரியர். ஜோஷி அவர்கள் இந்த டிபார்ட்மெண்ட்டில் உனக்குத் தேர்வு நடத்துவதை நான் அனுமதிக்க மாட்டேன் என்று சொல்லிவிட்டார். எனது பேராசிரியர். வினய் ஜெய்னிடம் இதைச் சொல்ல விரும்பவில்லை. பல்கலைக் கழகத்திற்கு, கித்வாய் புற்றுநோய்க் கழக இயக்குநரிடமிருந்து. நான் கித்வாய் கழக பேராசிரியர் ஆனதினால், கித்வாய் மருத்துவ நிலையத்திலேயே எனக்கு தேர்வு நடத்தலாம் என்ற அனுமதிக் கடிதத்தை எடுத்துப் போனேன். பெங்களூர் பல்கலைக்கழக தேர்வு ஆணையர் உடனே இந்த ஆலோசனைக்கு அனுமதி அளித்தார். வியாழக்கிழமையன்று 3மணியளவில் கித்வாய் புற்றுநோய் மருத்துவக்கழகத்திலேயே என்னுடைய நேர்முகத்தேர்வு நடந்தது. 25 ஆசிரிய நண்பர்கள் கலந்து கொண்டு மிகவும் நல்ல முறையில் தேர்வு நடந்து, அன்று மாலையே முடிவுகளை 2 தேர்வு ஆசிரியர்கள் கையெழுத்திட்டு, பல்கலைக் கழகத்திற்கு அனுப்பினர். அடுத்த நாள் அனந்தா டாக்டரிடமும் பேராசிரியர். வினய் ஜெய்ன் என்னுடைய தேர்வைப் பற்றியும், என்னுடைய ஆராய்ச்சியின் முக்கியத்துவத்தையும் தெரிவித்தார்.

பிறகு ஒருவாரத்திற்கு மேல்ஆகியும் தேர்வு முடிவை பல்கலைக்கழகம் அறிவிக்கவில்லை. நான் சென்ட்ரல் கல்லூரி வளாகத்தில் போய், தேர்வுப்பிரிவு அதிகாரியைப் பார்த்தேன். அவர் உன்னுடைய தேர்வு சரியாக நடத்தப் படவில்லை. அதனால் தேர்வு முடிவுகள் வெளியிடமுடியாத நிலையிலிருக்கின்றது. என்னால் ஒன்றும் செய்யமுடியாது என்று சொல்லிவிட்டார. எனக்கு மிகவும் சினம் வந்தது. நேராக இயக்குநர். அனந்தா அவர்களைப் பார்த்தேன். அவரிடம் உங்கள்

பல்கலைக்கழகத்தின் நிலையைப் பார்த்தீர்களா! பேராசிரியர். வினய் ஜெய்ன் ஒரு ஜெர்மனிநாட்டு பேராசிரியர்: உலகம் போற்றுகின்ற ஒரு உயிரிய இயற்பியல் ஆராய்ச்சியாளர். அவர் நடத்திய தேர்வு முடிவையே வெளியிட மறுக்கிறார்களே! நீங்களே இதற்கு ஒரு விடையைக் கண்டுபிடிக்க வேண்டும். நானே இந்த பல்கலைக்கழகத்தின் பேராசிரியராக இருந்தும், என்னுடைய தேர்வுமுடிவையே இந்த நிலையில் செய்து விட்டார்களே என்று சினந்து பேசினேன்.

என்ன தோன்றிற்றோ அனந்தா அவர்களுக்கு. மதியம் 2 மணிக்கு மேல் ஆகிவிட்டடது. அவர் சாப்பிடக் கூட இல்லை. மகிழ்வுந்தை எடுக்கச் சொன்னார். நேராக பல்கலைக் கழகத் தேர்வுப்பிரிவுக்குச் சென்றார். தேர்வு மேலாளரிடம் பேசியவுடன், அவர் கண்முன்னிலையிலையே அந்தக் காகிதக் கவரைப் பிரித்து, தேர்வு முடிவைச் சொல்லிவிட்டார்கள். அன்று மாலை 5 மணியளவில, என்னுடைய இல்லத்தில் அழைப்பு மணியடித்தது. டாக்டர்.ஸ்ரீநிவாஸ் என்பவர் வந்து, என் இல்லத்திலேயே Ph.D Degree தேர்வு முடிவு வந்து சேர்ந்தது. உடனேயே நான் ஆடுகுடி தந்திநிலையத்திலிருந்து என் மாமனாருக்குத் தந்தி மூலம் இந்த மகிழ்ச்சியைத் தெரிவித்து விட்டேன். அவர்கள் குடும்பத்தில் நான் டாக்டரேட் படித்த மாப்பிள்ளை என்று அதற்கப்புறம் சொல்லிப் பெருமைப்பட்டுக் கொண்டனர். என்னுடைய தாய் தந்தை, தமையனார் யாருக்குமே நான் தெரியப் படுத்த விரும்பவில்லை. அந்தக் காலத்தில் அவர்களுடன் எனக்கு அவ்வளவாக உறவு சரியாக இருக்கவில்லை. ஆனால் உடனே இந்த சாதனையை என்னுடைய பேராசிரியர் நண்பர்களான திரு. ஏ. நாகரத்தினம், திரு. ஜி.ஸுப்ரமணியன், திரு. பி.எஸ். விஸ்வநாதன், டாக்டர். பி.எஸ். ஐயர், டாக்டர். ஜி. வெங்கட்ராமன், டாக்டர். சிரில் ஜயச்சந்திரன், டாக்டர். டி.பி. ராமச்சந்திரன், டாக்டர். பந்த், டாக்டர். ஆர்.என்.எல். ஸ்ரீவத்ஸவா, டாக்டர். ஏ.கே.ஷுக்ளா, டாக்டர்.சுரீந்தர் கௌல், டாக்டர். ஏ.வி.இலக்ஷ்மணன், டாக்டர்.எஸ்.ஜே.ஸுப்பே, எல்லோருக்கும் தெரிவித்தேன். வெளிநாட்டில் டாக்டர். மைக்கல் டே அவருக்கும் கைக்கடிதம் எழுதினேன். எல்லோரிடமிருந்தும் பாராட்டுக் கடிதங்கள் வந்தன.

**ஜெயம்மா வழக்கும் நானும்:**

இரிடியம்-192 சிகிச்சை பெங்களுரில் இல்லாதிருந்த நேரம். அந்த சிகிச்சை தொடங்குவதற்காக நான் டாடா மெமோரியல் ஆஸ்பத்திரியில் ஒரு சிறிய கோர்ஸுக்கு பிப்ரவரி மாதம் 1992 ல் போய் வந்தேன். ஒரு ரிபோர்ட் கொடுத்து, அதற்கு தேவையான உபகரணங்களை கித்வாய் இன்ஸ்ட்டியூட்டில் வாங்க வைத்தேன். முக்கிய மந்திரி பங்காரப்பா அவர்கள் ஆஸ்பத்திரிக்கு இன்ஸ்பெக்ஷன் வந்தபோது எல்லா ரூம்களையும் கூட்டிக்கொண்டு காண்பித்தோம். டாக்டர். விஸ்வநாத் அவர்களை எத்தனை முறை கேட்டுக் கொண்டும், அவர் இரிடியம் பிரிப்பரேஷன் ரூம் காட்ட வேண்டாம் என்று கூறிவிட்டார். அதன் பரிணாமம் பின்னால் தான் அனுபவித்தோம். அந்த சிகிச்சை செய்யப்போய் தான் எனக்கும் டாக்டர் ரெட்டி அவர்களுக்கும் தலைவலி ஏற்பட்டது. எங்களுடைய மரியாதைக்கே பங்கம் ஏற்பட்டது. 14 வருடம் வனவாசம் போகப்போகிறோம் என்பது அப்பொழுது எங்களுக்குத் தெரியாது.

ஆகஸ்ட் 92ல் தான் எனக்கு டாக்டரேட் பட்ட தேர்வு முடிவு அறிவிக்கப்பட்டது. பிறகு அந்த வருடம் செப்டம்பர் திங்களில் புதுடில்லியிலும், மும்பையிலும் மெடிகல் பிஸிக்ஸ் கான்∴பரன்ஸ்களில் பங்குவகித்தேன். பிறகு சென்னை கன்னிமாரா ஹோட்டலில் புற்றுநோய் சிகிச்சையில் எலக்ட்ரான்கள் பற்றி ஒரு சொற்பொழிவு ஆற்றினேன். அதற்குப்பிறகு நவம்பர் திங்கள் கடைசியில் இரிடியம் சிகிச்சை ஆரம்பித்தோம். முதன் மந்திரி பங்காரப்பா அவர்கள் கித்வாய்க் கழகத்திற்கு வந்து கதிரியக்கப் பிரிவை வந்து பார்த்து போனார். நான் பிப்ரவரி மாதம் மும்பை டாட்டா மெமோரியல் ஆஸ்பத்திரியில் கற்றுக் கொண்டு வந்த சிகிச்சை முறைகளைக்கொண்டு எனது வைத்தியப் பிரிவில் 8 நோயாளிகளுக்கு சிகிச்சை நன்றாகக் கொடுக்கப் பட்டது. அப்பொழுது ஜெயம்மா என்ற பெண்மணி கர்ப்பப் பை புற்றுநோயால் மிகவும் பாதிக்கப் பட்டு, சிகிச்சைக்காக வந்திருந்தார். டைரக்டர் அனந்தா என்னைக் கூப்பிட்டு, டெம்ப்ளேட் ஒன்று இருந்தால் இந்த பேஷண்ட்க்கு இரிடியம் சிகிச்சை கொடுக்கலாமே என்றார். நானும் பேஷண்ட்டிடம் ஒரு இம்ப்ரெஷன் எடுத்து, பெர்ஸ்பெக்ஸ் பலகைகளை எடுத்துச் சென்று, இன்டஸ்ட்ரியல் ட்ரெயினிங் இன்ஸ்ட்டியூட்டில் டெம்ப்ளேட் தயார் செய்து கொடுத்தேன். 29ம் தேதி நவம்பர் டாக்டர் கிருஷ்ணமூர்த்தி ரெட்டி அவர்கள் இம்ப்ளேண்டேஷன் செய்து முடித்தார். செக் ∴பிலிம் எடுத்துப் பார்த்ததில் நன்றாக புரொசீஜர் செய்திருந்தார். அன்று ட்ரீட்மெண்ட் பிளானிங்கெல்லாம் முடிந்த பிறகு நான் வீட்டிற்குப் போய்விட்டேன். அடுத்த நாள் 30ம் தேதி,

நான் அனந்தபூர் போவதற்காக, பஸ்ஸில் சிடி ஸ்டேஷன் சென்று, குர்லா எக்ஸ்பிரஸில் காலை 8:30 மணிக்கு புறப்பட்டு சென்று விட்டேன். அன்று ஸ்ரீகிருஷ்ண தேவராயா பல்கலைக் கழகத்தில் மத்தியானம் ஒரு சொற்பொழிவாற்றினேன். அங்குள்ள பேராசிரியர்களுடன் கலந்துரையாடிவிட்டு, மாலை ஹோட்டலில் டின்னர் கொடுத்தனர். பிறகு எக்ஸ்பிரஸ் பஸ்ஸில் என்னை ஏற்றிவிட்டனர். பெங்களூர் விடிகாலை 4 மணியளவில் வந்து, பிறகு ஆட்டோ பிடித்து வீட்டிற்கு வந்தேன்.

அடுத்த நாள், 1ம் தேதி காலை எனது டிபார்ட்மெண்டுக்குப் போய்விட்டு, டைரக்டர் அனந்தா ரூமிற்குப் போய், நான் அனந்தபூர் பல்கலைக் கழகத்தில் கொடுத்த சொற்பொழிவைப்பற்றி சொன்னேன். அப்பொழுது அவர் என்னிடம் டிபார்ட்மெண்ட்டில் யாராவது ஏதாவது சொன்னார்களா என்று கேட்டார். எனக்கு யாரும் எதுவும் சொல்லவில்லையே என்று சொன்னேன். அவர் அப்பொழுது சொன்னதைக் கேட்டபோது அதிர்ச்சிக்குள்ளானேன். இரிடியம் இம்ப்ளாண்ட் கம்பிகளை வெளியில் எடுக்கும்போது சில கம்பிகள் உள்ளேயே தங்கிவிட்டன என்றார். நான் உடனே ‘‘நீங்கள் எக்ஸ்-ரே எடுத்துப் பார்த்தீர்களா, நான் அந்த செக்-ஃபிலிம்மைப் பார்க்கலாமா?’’ என்றேன். ஃபிலிம்மைப் பார்த்தேன். ‘‘நான் பேஷண்ட்டைப் பார்க்கலாமா? நீங்கள் ஆபரேஷன் எதுவும் செய்யவில்லையே?’’ என்று கேட்டேன். அப்பொழுது அவர் நாங்கள் ஆபரேஷன் செய்து பார்த்தோம் ஆனால் பிரயோஜனமில்லை என்றார். நான் உடனே BARC, AERB எல்லோருக்கும் ரிபோர்ட் செய்துவிட்டீர்களா? என்று கேட்டேன். இல்லை என்றார். உடனே டைரக்டர் பெர்ஸனல் செக்ஷன் டெலிஃபோனை எடுத்து டாக்டர். ஜி. வெங்கட்ராமன் அவரிடம் இந்த மாதிரி இரிடியம் இம்ப்ளேண்டேஷனில் பேஷண்ட் உடம்பில் 3 ஒயர்கள் தங்கிவிட்டன. பேஷண்ட் ஐஸலேஷன் வார்டில் வைத்திருக்கிறோம் என்றேன். அவர் உடனே நானே டாக்டர் பி.எஸ். ஐயர் மற்றும் AERB க்கும் இன்ஃபார்ம் செய்துவிடுகிறேன். நீங்களே ஸீனியர் ஆனதினால் மேனேஜ் பண்ணுங்கள் என்று சொன்னார். இதை டைரக்டரிடம் சொல்லிவிட்டு பிறகு டிபார்டமெண்ட்டுக்குப் போனேன்.

உடனே என்னுடைய ஆபீஸுக்குப் போய் நடந்த எல்லாவற்றையும் டீடெய்ல்டாக எழுதிவிட்டேன். அடுத்த நாள் மாலை ஏழு மணியளவில் என் ரூமில் ஏதோ எழுதிக்கொண்டு உட்கார்ந்திருந்தேன். அப்பொழுது டாக்டர் கிருஷ்ண பார்கவா மகள் ஸர்ஜன் என்னிடம் வந்து, ஸார், அப்பா இன்ஸ்ட்டியூட்டுக்கு வெளியே காரில் உட்கார்ந்திருக்கிறார், ஏதோ உங்களிடம் பேசவேண்டுமாம் என்று கூப்பிட்டார்கள். எனக்கு தெரியும் இந்த விஷயமாகத் தான் இருக்கும் என்று நினைத்து, ஒரு தெர்மோகூல் ஷீட்டும், 3, 4 குச்சிகளையும் எடுத்துப் போனேன். ப்ளூ மாருதி காரில் டாக்டர். பார்கவா பின் ஸீட்டில் உட்கார்ந்திருந்தார். என்ன விஷயம் கித்வாயில் நடக்கிறது என்று கேட்டார். நான் தெர்மோகூல் ஷீட்டில் குச்சிகளை பிக்ஸ் பண்ணி, இந்த மாதிரி இரிடியம் இம்ப்ளாண்ட் நடந்தது. சில ஒயர்கள் பேஷண்ட் உடம்பில் தங்கிவிட்டன. இந்த மாதிரி நடந்தால் பேஷண்ட்டை ஐஸலேஷனில் வைக்க வேண்டும், உடனே ரெகுலேடரி டிபார்ட்மெண்ட் BARC, AERB க்கு இன்ஃபார்ம் பண்ணவேண்டும். எல்லாம் செய்தாகி விட்டது, ரிபோர்ட்டெல்லாம் டைரக்டருக்குக் கொடுத்து விட்டேன் என்று சொன்னேன். ‘‘நான் இதை விடப்போவதில்லை, என்ன நினைத்துக் கொண்டிருக்கறீர்கள’’ என்று கோபமாகச் சொன்னார். அடுத்த நாள் நான் டாக்டர். அனந்தாவிடம் இந்த மாதிரி நேற்று நடந்தது, என்ன ஆகப்போகிறதோ தெரியவில்லை. ஆனால் எல்லா ப்ரொஸீஜர்களும் சரியாக தான் நடந்திருக்கின்றன என்றேன்.

டைரக்டரிடமிருந்து, டாக்டர். இரவிச்சந்திரன் அவர்கள் புரொபஸர். கேஷவாவையும், டாக்டர். கிருஷ்ணமூர்த்தி ரெட்டியையும் பிரிலிமினரி என்க்யொரி செய்து அர்ஜெண்ட்டாக ரிபோர்ட் அனுப்ப வேண்டும் என்று ஆர்டர் செய்தார். உடனே அவர் CAO விடம் சொல்லி எனக்கு (HOD, Radiation Physics) பிரிலிமினரி என்க்யொரீ செய்யச் சொல்லி ஆர்டர் கொடுத்தார். டிடெய்ல்டாக இருவரையும் என்க்யொரி செய்து ஸீல்ட் கவரில் ரிபோர்ட் அன்றே அனுப்பி விட்டேன். நான் ப்ரொபஸர். கேஷவாவையும், டாக்டர் கிருஷ்ணமூர்த்தி ரெட்டியையும் என்க்யொரீ பண்ணிய விஷயங்களை, என்னுடைய சிறிய டைப்ரைட்டரிலேயே ரிபோர்ட் டைப் செய்து, ஒரு கவரில் ஸீல் பண்ணி டைரக்டரிடம் கொடுத்து, காப்பியில் அவரிடம் அக்னாலட்ஜ்மெண்ட் வாங்கி இருந்தேன். அடுத்த நாள் டாக்டர்.பி.எஸ்.ஐயர் அவருடைய BARC குருப் டைரக்டர் டாக்டர். கோபிநாத் உடனே பெங்களூர் இன்ஸ்பெக்ஷன் வந்து என்னிடம் டீடெய்ல்ஸ் எல்லாம் விசாரித்தார்கள். வார்டில் போய் ஜெயம்மா பேஷண்ட்டைப் பார்த்தார்கள். ரேடியேஷன் அளவுகளெல்லாம் எடுத்தார்கள். பிறகு டைரக்டரிடம் எல்லாவிதமான ஆக்ஷன்களெல்லாம் சரியாக

செய்யப்பட்டிருக்கின்றன. பேஷண்ட் இன்னும் கொஞ்சநாள் ஐஸலேஷனிலேயே இருக்கட்டும் என்று சொல்லி, ஒரு ரிபோர்ட் கொடுத்து விட்டு சென்றனர்.

அடுத்த இரண்டு நாட்களில் நடந்தது விபரீதம். டைம்ஸ் ஆப் இண்டியா நியூஸ் பேப்பரில் ரேடியம் ஒயர்கள் பேஷண்டின் உடம்பில் ஓடிக்கொண்டிருக்கின்றன. தப்பான ட்ரீட்மெண்ட் கித்வாயில் கொடுத்திருக்கிறார்கள் என்று முதல் பக்கத்திலேயே பெரிதாக வந்து விட்டது. டாக்டர்.இரவிச்சந்திரன். டாக்டர். கிருஷ்ணமூர்த்தி ரெட்டி இருவரும் செய்த ட்ரீட்மெண்ட்டினால் பேஷண்ட்டுக்கு மிகுந்த ப்ராப்ளெம் ஆகி, பேஷண்ட் நிலைமை மிகவும் கவலைக்கிடமாகி விட்டது என்று பெரிதாக எழுதிவிட்டார்கள். கர்நாடகா கவர்மெண்ட்டில் உடனே எக்ஸ்பிளனேஷன் கேட்டு டைரக்டருக்கு லெட்டர் வந்தது. அதற்கு நடந்தவைகள் எல்லாம் எழுதி ஒரு பதிலை நாங்கள் இன்ஸ்ட்டியூட்டில் இருந்து அனுப்பினோம். கவர்மெண்ட் கிருஷ்ண பார்கவாவை நியமனம் செய்து ஒரு என்க்யொரீ ஆர்டர் செய்துவிட்டார்கள். 30ம் தேதி நவம்பர் நடந்த ட்ரீட்மெண்ட், மருத்துவக் கழகத்தில் ஒழுங்கான கலாச்சாரம் இல்லாததினால் 22ம் தேதி டிசம்பர் ஆங்கில தினசரிப் பத்திரிக்கையில் இல்லாததும் பொல்லாததுமாகி வெளிவந்து விட்டது. அதில் ஜெயம்மா என்ற பேஷண்ட்டுக்கு கித்வாய் இன்ஸ்ட்டியூட்டில் தப்பாக ரேடியம் ட்ரீட்மெண்ட் கொடுத்ததனால், அந்த பேஷண்ட் நிலைமை கவலைக்கிடமாக இருக்கிறார்கள் என்று பிரஸ் ரிபோர்ட் வந்தது. அதில் டிபார்ட்மெண்ட் என்க்யொரி கவர்மெண்ட் ஆர்டர் பண்ணியிருந்தார்கள். கித்வாய் இன்ஸ்ட்டியூட்டிற்கும் எக்ஸ்ப்ளனேஷன் கேட்டு, லெட்டர் ஹெல்த் செகரட்டரியிடமிருந்து வந்தது. டைரக்டர் என்னையே அதற்கும் ரிப்ளை டிரா∴ப்ட் செய்யச் சொன்னார். அதற்கும் பதிலை நானே டிரா∴ப்ட் செய்து கொடுத்தேன். BARC குரூப் டைரக்டர் டாக்டர். கோபிநாத், டாக்டர். பி.எஸ்.ஐயர் இருவரும் கொடுத்த ரிபோர்ட்டுகளையும் அந்த ரிப்ளையுடன் இணைத்து அனுப்பினோம். அதற்கப்புறம் டாக்டர்.பி.எஸ்.ராவ், ஸர்ஜன் டாடா மெமோரியல் ஆஸ்பத்திரியில் இருந்து வந்தார். அவரும் செக் செய்து பார்த்துவிட்டு ஜெயம்மா நிலைமை மிகவும் கவலைக்கிடமாக இருப்பதால் ஆப்பரேஷன் செய்யமுடியாது என்று சொல்லிவிட்டார்.

நான் ஹைதரபாத் கான்∴ப்ரன்ஸுக்கு ஜனவரி மாதக்கடைசியில் போயிருந்தேன். அங்கு ‘சிறிய கோபால்ட் மெஷின்’ பற்றி ஒரு ரிசர்ச் பேப்பர் படித்தேன். அது போன்ற இயந்திரத்தின் உதவியால், கழுத்து மற்றும் தலை புற்றுநோய்களுக்கு சிகிச்சை கொடுக்க முடியும் என்று ஆய்வறிக்கை கொடுத்திருந்தேன். எல்லோரும் அந்த முயற்சியைப் பாராட்டினார்கள். அதேசமயம் இண்டியா டுடே, மற்ற பத்திரிக்கைகளில் ஜயம்மா கேஸ் பற்றிய ரிபோர்ட்டுகள் வந்திருந்தன. அதனால் நான் மகிழ்ச்சி மற்றும் துயரம் இரண்டு மனநிலைகளையும் கொண்டிருக்க வேண்டியிருந்தது. பிறகு ஹைதராபாத் எக்ஸ்பிரஸில் பெங்களூர் வந்து, கித்வாய் இன்ஸ்ட்டியூட்டிற்கு ஆட்டோவில் வந்திறங்கியபோது, வழியிலேயே ஜேனட் பரமேஸ்வரன் உங்களை என்க்யொரிக்கு கூப்பிடுகிறார்கள், உடனே கெஸ்ட்ஹவுஸுக்கு வரவேண்டும் என்று சொன்னார்கள். அப்பொழுதுதான் தெரியும் எனக்கு, என்க்யொரீ டாக்டர்.கிருஷ்ண பார்கவா ஆரம்பித்து விட்டார் என்று.

நான் உடனே டைரக்டர் ரூமில் டாக்டர். அனந்தாவைப் பார்த்து பர்மிஷன் வாங்கிக் கொண்டு, ∴பைல்களை எடுத்துக் கொண்டு, கெஸ்ட் ஹவுஸுக்குச் சென்றேன். டாக்டர்.கிருஷ்ண பார்கவாவிடம் நான் டாக்குமெண்ட்டுகள், டெம்ப்ளேட் மற்றும் நீள குழாய் ஊசிகள் இவைகளைக் கொடுத்தேன். அவர் கேட்ட கேள்விகளையும் முறையாக பதிலளித்தேன். மொத்தம் 40 நாட்கள் மொத்தமாக அவர் என்க்யொரி செய்துமுடித்தார்.

ஜெயம்மா பேஷண்ட் இறந்துவிடுவார் என்று தெரிந்தவுடன் நான் பேத்தாலஜி புரபொஸரிடம் எப்படி இரிடியம் ஒயரைக் கண்டெடுக்க வேண்டும் என்று கோதுமை மாவு கட்டியில் செய்து காட்டினேன். அதற்கு முத்தையன் அவர்களிடம் பேசி ரெக்டல் டோஸிமீட்டரில் ரெஸிஸ்ட்டன்ஸ்களை மாற்றி அமைத்தேன். அப்பொழுது ஜெயம்மா பேஷண்ட் இறந்து விட்டார். நான் அந்த இறந்த உடலை விக்டோரியா ஆஸ்பத்திரிக்கு ஆம்புலன்ஸில் கொண்டு போக, சர்ட்டி∴பிகேட் கொடுத்து மார்ச்சுவரிக்கு அனுப்பினேன். நான்தான் போஸ்ட் மார்ட்டம் செய்யும்போது உடனிருக்க வேண்டும், வேறு யாரையும் நான் அனுமதிக்க மாட்டேன் என்று, கூறிவிட்டார் மருத்துவப் பேராசிரியர் டாக்டர் திருநாவுக்கரசு என்ற நல்ல மனிதர். பிற்காலத்தில் எனக்குத்தெரிய வந்தது அவர் மிகவும் கண்டிப்பானவர், உண்மையே உரைக்கும் பேராசிரியர் என்று. நான் முதன்முறையாக உடல்கூறு செய்வதை முழுவதுமாகப் பார்த்தேன். நான் கொண்டு

சென்றிருந்த டோஸிமீட்டர் மூலமாக, மூன்று இரிடியம் ஒயர்களையும் கண்டுபிடித்து, அவைகளை ஈயப்பெட்டியில் வைத்து, அங்கேயே ஸீல் செய்து பிறகு டாக்டர் திருநாவுக்கரசரிடமும் கையெழுத்து இடும்படி கேட்டுக் கொண்டேன்.. அந்த இறந்த உடலில் எந்த கதிர்வீச்சு பொருளும் இல்லை என்பதாக ஒரு சர்ட்டி.ஃபிகேட் கொடுத்தேன். புரபொஸர் திருநாவுக்கரசு கரெக்டாக உங்கள் பணிசெய்து, என்னுடைய கடமையை மிகவும் எளிதாக்கி விடடீர்கள் என்று கூறி, எனக்கு விடை கொடுத்தார். நான் பிறகு இன்ஸ்ட்டியூட் வந்து, டாக்டர் ஹேமாவிடம் அந்த ஈயப்பெட்டியைக் கொடுத்து, காட்ரேஜ் பீரோவில் வைக்கச் சொல்லி ஒப்படைத்தேன்.

ஏப்ரல் மாதம் 1993 எனது வாழ்க்கையில் முக்கியமான காலகட்டம். அப்பொழுது தான் எனக்கு Ph.D டிகிரி அவார்ட் ஆகியது. மாண்பு மிகு கர்நாடகா கவர்னரிடம் நான் மேடையில் போய் வாங்கினேன். அப்பொழுது நான் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. எல்லாம் பெரியவாள் அனுக்ர ஹம் என்று மனதில் நினைத்த தினம். பிறகு மே மாதம் 25ம் நாள். அதற்கு முதல் நாள் தான் புரபொஸர் வினைஜெயினிடம் இருந்து சிவப்பு ஜெர்னலுக்கு நான் சில சந்தேகங்களைத் தீர்க்க வேண்டுமென்று ஃபோன் வந்திருந்தது. அதற்கு பதில் நான் கம்ப்யூட்டரில் டைப் செய்து கொண்டிருந்த சமயம். ஆபீஸ் அட்டெண்டர் ஒரு ஸீல்ட் கவரைக் கொடுத்தார். அதில் எழுதிய நம்பரைப் பார்த்தவுடனேயே எனக்கு தெரிந்துவிட்டது அது ஏதோ ப்ராப்ளம் உடைய லெட்டர் என்று. அதில் என்னை இம்மீடியட் ஆக தற்காலிக வேலைநீக்கம் (ஸஸ்பென்ஷன்) செய்திருப்பதாக இன்ஸ்ட்டியூட் டைரக்டரிடமிருந்து வந்திருந்தது. அதைப்படித்து, கோட் உள்ளே வைத்துவிட்டு, என்னுடைய ஜெய்ன் லெட்டரை முடித்து, அதை பெர்ஸனல் செக்ஷன் மூலமாக ஃபேக்ஸ் செய்துவிட்டு, நான் டாக்டர். அனந்தா ரூமிற்குப் போனேன். என்னைப் பார்த்து அனந்தா டாக்டர், மிகவும் வருத்தம் ரவிச்சந்திரன் அவரே, என்றார். நான் உடனே, பரவாயில்லை சார், யாரிடம் டிபார்ட்மெண்ட் பொறுப்பை ஒப்படைக்க வேண்டுமென்று சொல்லுங்கள் என்று கேட்டேன். அவர், அனில்குமார் ஷர்மாவிடம் சார்ஜ் ஹேண்ட் ஓவர் செய்யவேண்டும் என்ற அவர் முடிவைச் சொன்னார். நான் உடனே, AO ரூமிற்குப் போய் என் கையாலேயே அந்த ஆர்டரை எழுதிக் கொடுத்தேன். அவரே மிகவும் ஆச்சரியப்பட்டார். உங்களுக்கு இவ்வளவு கஷ்டம் வந்திருக்கும் சமயத்திலும் நீங்கள் இன்ஸ்ட்டியூட் வேலைக்கு இத்துணை முக்கியத்துவம் கொடுக்கிறீர்களே என்று.

**பதினான்கு மாதங்கள் தற்காலிக வேலை நீக்க நினைவுகள்:**

நானும், டாக்டர் பி.கே.எம் ரெட்டியும் தற்காலிக வேலை நீக்கத்தில் இருந்தோம். குவார்ட்டர்ஸில் தான் இருவரும் இருந்தோம். நான் டாக்டர் ரெட்டியிடம், ஹைகோர்ட்டில் கேஸ் போடுவதில், விருப்பமில்லை என்று சொல்லிவிட்டேன். வக்கீல் மோகனரங்கத்திடம் கொஞ்ச நாள் போய்க்கொண்டிருந்தோம். சுப்ரமணிய ரெட்டி என்பவர் ஒரு நாள் எங்களுடன் மோகனரங்கத்திடம் வந்தார். அவர் டாக்டர் ரெட்டியின் உறவினர். டெல்லியில் இருந்து வந்திருந்தார். அவர் உடனே நீங்கள் வக்கீலை மாற்றி விடுங்கள். எனக்கு அவர் மேல் நம்பிக்கையில்லை என்றார். சுப்ரமண்யம் லேபர் ஆபீஸர் ஆனதினால் எல்லா விபரங்களும் அவருக்குத் தெரியும். அவர் மூலமாகத் தான் எங்களுக்கு அட்வகேட். பிரஸாத் அறிமுகம் ஆனார். அவர் கடைசி வரை லெட்டர் மூலமாகவே நாம் போராடலாம் என்று அறிவுரை கொடுத்தார். அதில் அவர் வெற்றியும் கடைசியில் வாங்கிக் கொடுத்தார். எங்களுடைய மரியாதைகளும் எல்லா இடங்களிலும் பாதுகாத்ததற்கு நன்றிக்கடன் பட்டிருக்கிறோம். எங்களுக்கு மனநிலை சரியில்லாத அந்த சமயத்தில், வேலையே பறிபோகும் என்ற அந்த நிலைமையில், நீதிமன்ற அணுகுமுறைகள் சரியாகப் புரிபடாமல் இருந்த தருணத்தில், அந்த சுப்ரமணியக் கடவுளே லேபர் ஆபீஸர் வடிவில் வந்தது அது பெரியவாள் கருணையென்றே சொல்லவேண்டும்.

இன்னொரு வியப்பான செய்தியை நான் இப்பொழுது சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். எங்களுடைய தற்காலிக வேலை நீக்கம் 14 மாதங்கள் தொடர்ந்தன. கர்நாடக அரசு வேலைநீக்க உத்தரவை ரத்துசெய்து, கவர்னிங் கவுன்ஸில் சேர்மென் மூலமாக உத்தரவு கொடுத்தது. ஆனால் வேலைநீக்கத்தை நீக்கி எங்களிருவரையும் வேலைக்கு வரச்செய்ய கித்வாய் இன்ஸ்ட்டியூட்டில் யாராலும் முடியாத நிலை. எல்லோரும் இயலாமையை எண்ணி நொந்திருந்த தருணத்தில் தான் சுந்தர் என்ற என் நண்பனின் திருமணத்திற்கு, நண்பன் ராஜூ பூனாவில் இருந்து பெங்களூர் வந்திருந்தார். அவர் எனது பி.யு.ஸி சமயத்து நண்பன். எனது கித்வாய் குவார்ட்டர்ஸில் ஒரு இரவு தங்கினான். அப்பொழுது அவன், ரவி நான் ஒரு ஐடியா சொல்லுகிறேன், எனக்கு ஒரு

ஐ.ஏ.எஸ் ஆபீஸர் டெல்லி கரோல்பாக்கில் இருக்கிறார். அவர் திரு.சேஷன் பேட்ச் ஆபீஸர். நீ ஒரு லெட்டரில் உன்னுடைய பிராப்ளத்தை நன்றாக விவரித்து எழுதுவாய். அப்புறம் கடவுள் விட்டவழி என்று சொல்லி விட்டு, அடுத்த நாள் திருமணம் முடிந்து, பூனா போய்விட்டான்.

நானும் லெட்டர் எழுதினேன். திடீரென்று, அப்பொழுது நடந்த கித்வாய் கவர்னிங் கவுன்ஸிலுக்கு, கர்நாடக அரசு முக்கிய செயலாளர் ஒரு புது அஜென்டா ஸப்ஜெக்ட் வைத்துவிட்டார். 2 டாக்டர்களையும் உடனே வேலைக்கு எடுப்பது பற்றி. ஆடிட் அப்ஜெக்ஷன் வேறு வந்துவிட்டது ஏன் இவ்வளவு காலதாமதம் என்று. கர்நாடக முதல்வர் வீரப்ப மொய்லி அவர்கள் அந்த கவர்னிங் கவுன்ஸில் மீட்டிங்குக்கு வந்திருந்தார். உடனே 2 டாக்டர்களையும் வேலைக்கு உடனே வர ஆர்டர் கொடுத்துவிட்டார். இதுபோன்ற விந்தை எந்த அரசிலேயும் நடந்தது இல்லை. அதில் மற்றொரு விந்தை, முதல்வர் வீரப்ப மொய்லிதான் எங்களை வேலை நீக்கம் செய்ய ஆர்டர் கொடுத்திருந்தார். அவர் மட்டும் போய் வேறொரு முக்கிய மந்திரி வந்திருந்தால் இது பிரம்மப் பிரயத்தனமே. மேலும் இந்த கவர்னிங் கவுன்ஸில் முடிந்த 2 மாதங்களில் காங்கிரஸ் அரசு திரும்பவும் எலக்ஷனில் வந்து, திரு கிருஷ்ணா அவர்கள் முதல் மந்திரி ஆகிவிட்டார். மத்திய அரசில் திரு தேவே கவுடா பிரதம மந்திரி ஆனார்.

அதற்குப் பிறகு நான் மூன்று முறை காஞ்சீபுரம் போயிருந்தேன். ஒருமுறை என்னுடைய Ph.D Thesis ஐ மூன்று பெரியவாளிடமும் காண்பித்து ஆசீர்வாதம் வாங்கினேன். பரமாச்சாரியாரிடம் நன்றாக நேருக்கு நேர் பார்த்து என்னை இந்த மாதிரி பரிட்சை செய்கிறாரே கடவுள் என்று முறையீடு செய்து கொண்டேன். நான் நாக்பூர் கான்.்ப்ரன்ஸ் போயிருந்த போது டாக்டர். சுந்தர் ராவ் அவர்கள், ரவி எதற்கும் கவலைப் படாதே. ஆருத்திரா நட்சத்திரத்திற்கு இப்பொழுது அஷ்டம சனி நடக்கிறது. இப்பொழுது ஐந்தில் குரு இருக்கிறார். எல்லாம் சரியாகிவிடும் என்றார். என்னுடைய ஸுனியர் பிரண்ட்ஸ் டாக்டர். ஸ்ரீவத்ஸவா, டாக்டர். சுரீந்தர் கவுல், டாக்டர். ஜீ.எஸ்.பண்ட், டாக்டர். நாகரத்தினம் எல்லோரும் நாங்கள் இருக்கிறோம், ஒன்றும் யாராலும் பண்ணமுடியாது என்றார்கள். டாக்டர். எம்.எஸ்.எஸ்.மூர்த்தியவர்கள் இரண்டு முறை விதான ஸௌதா போய் ஹெல்த் செகரட்டரியையும் போய்ப்பார்த்து வந்திருக்கிறார்கள்.

ஆகஸ்ட் மாதத்தில் நாங்கள் வேலைக்கு சேர்ந்தோம். நான் வேலைக்கு வந்தது உஷா அப்பாவிடம் உடனே தெரிவித்தேன். மறுபடியும் ஒரு அதிசயத்தை இங்கு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். எவை எப்படி நடக்க வேண்டும் என்று நிர்ணயிக்கப்பட்டவைகளோ அவை அப்படியே நடக்க வழிமுறைகளும் விதிக்கப் பட்டிருக்கும் என்பது பின்வரும் நிகழ்வுகள் விவரிக்கும். 7 வருடங்கள் ஆனபிறகு, இன்ஸ்ட்டியூட் லாயர் கொடுத்த அறிவுரையினால், டாக்டர். பிரபாகர் அவர்கள் டிஸிப்ளனரி அத்தாரிட்டியின் மூலமாக எங்களுடைய சார்ஜஸை எல்லாம் திரும்பப் பெறச் செய்தார் (1999). அப்புறம் இன்னொரு 7 வருடங்கள் கழித்து, ஸிவில் கோர்ட் எங்களுடைய கேஸைத்தள்ளுபடி செய்து 2006ம் வருடம் ஆர்டர் பிறப்பித்தது. இந்த நிகழ்ச்சிகள் நிஜமாகவே என்னுடைய புகழை உலகெலாம் பரவச்செய்யக் கடவுள் அருள் என்பது, உள்ளங்கை நெல்லிக்கனியாக நான் உணர்ந்தேன். பெரியவாள் எப்படி அவருடைய பக்தர்களைக் கண்ணும் கருத்துமாக காப்பாற்றுகிறார் என்பது இவைகள் மூலமாக நான் உணர்ந்து கொண்டேன். அந்தக் கஷ்டங்களிலும் என் குடும்பத்திற்கு எந்தக்குறையும் வராமலும் வைத்திருந்தது மற்றொரு வியப்பு. என் மகள் அந்த சமயத்தில் தான் டியூஷன் படித்தாள். டெண்டல் டாக்டர் படிப்புக்கு ஸெலக்ட் ஆகி நன்றாகப் படித்து முடித்தாள்.

**புதுக்கோட்டை வீடு எனக்குக்கிடைக்க அருளியது:**

என்னுடைய பழைய ஹெட்ஆ.்ப் தி டிபார்ட்மெண்ட் ஏ.டி.சிங் அவர்கள் சிறிய வயதிலேயே அறிவுரை கூறுவார் எல்லோரும் அசையாத சொத்தாக ஒரு வீடு சொந்தப் பெயரில் வைத்திருக்க வேண்டும் என்று. அப்பொழுது நான் வசந்தியிடம் ஒரு வீட்டுமனைக்காக வேலூரில் சொல்லி வைத்திருந்தேன். அப்பொழுது தான் திருச்சி வீட்டு வசதிப் பிரிவு, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தில் புதுக்கோட்டை ஹை இன்கம் குரூப் வீட்டு அட்வர்டைஸ்மெண்ட் பார்த்தேன். எப்படி அந்த அட்வர்டைஸ்மெண்ட் கிடைத்தது என்று எனக்கு இன்று வரை ஞாபகமில்லை. கான்பூரிலிருந்து ஜௌஹாரி என்பவர் அதற்கு விட்னஸ் கையெழுத்து போட்டிருந்தார். பறிபோக இருந்தது கோர்ட் மூலமாக, திரு முருகேஸன் என்ற வக்கீலின் உதவியுடன் எனக்குக் கிடைத்தது. எல்.ஐ.ஸியில் லோன் கிடைத்தும் பணம் கொடுக்கும் போது, எக்ஸிகியூடிவ்

என்ஜினியர் கேன்ஸல் செய்தாலும், நான் ஹவுஸிங் யூனிட் ஹெட்ஆபீஸில் போனபோது சென்னையில் எனக்கே அலாட் பண்ணியது எப்படி நடந்தது என்று என்னால் இப்பவும் சொல்லமுடியவில்லை.

**நடந்து முடிந்தவைகளின் பரிணாமங்கள்:**

யாரையும் கெஞ்சாமல் வெளிநாட்டில மஸ்கட்டில் பெரிய வேலை கிடைத்தது. அதற்கு முன்பு ஜெர்மனியில் போஸ்ட் டாக்டரில் ஃபெலோஷிப் கிடைத்தபோதும் போகமுடியாமலும், குவெய்த் ஆர்டர் கிடைத்தபோது எனக்கு ரிலீவ் ஆகமுடியாமல் போனதிற்கு, மஸ்கட்டில் வேலை செய்யவேண்டும் என்று கடவுள் இச்சை என்பது ஒரு விடுகதையாக இருந்தது, மஹா பெரியவாளின் அருளன்றி வேறெதுவேமியில்லை. எனக்கு கித்வாய் இனஸ்ட்டியூட்டில் வாலண்ட்டரி ரிடையர்மென்ட் கிடைத்தது. பென்ஷன் ஆர்டர் உடனே கிடைத்தது. எனக்கு பெயரும் புகழும் கிடைத்தது. மஸ்கட் இராயல் ஹாஸ்பிடலில் இத்தனை பேப்பர் பப்ளிஷ் பண்ணியது. எனக்கு FICNM, FICRO, FIMSA இந்த டிகிரிகளெல்லாம் கிடைத்தது, எனக்கு எக்ஸ்பர்ட் பிஸிஸிஸ்ட் பிரமோஷன் கிடைத்தது, மைதிலிக்கு திருமணம் ஆகி, அவள் குழந்தைகளுடன் சிங்கப்பூரில் இருப்பது, எனக்கு முதல் ஃப்ளாட் மல்லேஸ்வரத்தில் கிடைத்தது, கத்திரிகுப்பேவில் இரண்டாவது ஃப்ளாட் கிடைத்தது, அதற்கு பணம் கிடைக்க 25 இலட்சத்திற்கு புதுக்கோட்டை வீட்டை விற்றது, மூன்றாவது ஃப்ளாட் மல்லேஸ்வரத்தில் வாங்க அருளியது இவைகளெல்லாம் எப்படி எனக்கு பிராப்தம் ஆனது எல்லாம் மஹா பெரியவாளின் அருளில்லாமல் சாத்தியமே இல்லை என்பது நன்றாகத் தெரிகின்றது. அவர் என்னுடைய பி.எச்.டி தீஸிஸை தடவிப்பார்த்தது, இந்த அளவிற்கு என்னை உயர்த்தியது என்பது தவிர வேறு எதுவுமே காரணமில்லை என்பது எனக்கு மட்டுமே தெரிந்த உண்மை. அவருக்கு இன்றளவும் என்னுடைய பரிபூர்ண பாதசேவைகளை மானசீகமாகத் தொடர்ந்து செய்துகொண்டிருக்கிறேன்.

**இராயல் ஆஸ்பத்திரியில் குவார்ட்டர்ஸ் மாற்றம்:**

நானும் உஷாவும் லண்டன் போவதற்காக விஸாவுக்காக அலைந்து கொண்டிருந்தோம். சனிக்கிழமை இரவு ஃபிளைட் டிக்கட் கன்ஃபார்ம் ஆகியிருந்தது. அப்பொழுது புதன்கிழமை அன்று சாயந்திரமாகியது, விஸா ரெடியாகவில்லை, என்று இங்கிலாந்து விஸா ஆபீஸில் சொல்லிவிட்டார்கள். வருத்தத்துடன் வீட்டிற்கு வந்தபோது, அப்பொழுது தான் இராயல் குவாட்டர்ஸ் காலி பண்ணவேண்டும் என்று லெட்டர் கையில் வந்தது. என்னால் என்ன பண்ணமுடியும். அப்புறம் திங்கட்கிழமை வீஸா கிடைத்தது. உடனே என்ன ஆனாலும் சரி என்று நாங்கள் இருவரும் லண்டன் போய் வந்தோம். நாங்கள் மலேஷியா போக வேண்டி பிரபரேஷன் பண்ணிக் கொண்டிருந்த சமயம் இரண்டாவது லெட்டர் வீடு காலி பண்ணச்சொல்லிக் கொடுத்து விட்டார்கள். நான் என்ன பண்ணுவது என்று குழம்பி இருந்த சமயம். மலேஷியா போய்த்திரும்பி வருவது, ஜனவரி மாதம். டைரக்டர் பெர்ஸனல் கொடுத்த கெடு டிசம்பர் கடைசி. நான் இன்னொரு தடவை கடைசியாக, டைரக்டர் பெர்ஸனலிடம் பர்மிஷன் வாங்க லெட்டருடன் போனேன். அப்பொழுது, மஹாபெரியவாளை நான் வேண்டிக்கொண்டு அட்மினிஷ்ட்ரேஷன் பில்டிங்க்கு வந்துகொண்டிருந்தேன். அப்பொழுது இரண்டு மரங்களைக் கண் முன்பு ரம்பத்தால் அறுத்துக் கொண்டிருந்தார்கள். எனக்கு திடீரென்று மனதில் தோன்றியது இப்படி. மனித வாழ்க்கை நிலையானதல்ல. நான் மஸ்கட் வந்தபோது இந்த இராயல் காம்பஸில் தான் இருப்பேன் என்று நினைத்து வந்தேனா. பத்து வருடம் இருந்தது கடவுளின் இச்சை. அதேபோல், இங்கு இராயல் குவார்ட்டர்ஸில் இருப்பதற்கு முடிவுகாலம் வந்துவிட்டது என்று கடவுளின் இச்சை இருந்தால் நான் அதற்கு பணியவேண்டும் என்று தோன்றியது, பெரியவாளின் கிருபைதான். எப்படி அந்த அசுரவேகம் வந்ததோ, எப்படி புது வீடு கிடைத்ததோ, எப்படி அட்வான்ஸ் கொடுத்தேனோ தெரியவில்லை? உஷா ஒத்துழைப்புடன் வீட்டை ஷிப்ட் பண்ணிவிட்டு, மலேஷியா, சிங்கப்பூர் பயணம் முடித்துக் கொண்டு, பிறகு பெங்களூருக்கும் போய்விட்டு வந்துவிட்டோம். இப்பொழுது, புதுவீட்டில் நான் நன்றாக இருந்துகொண்டிருக்கிறேன். மலைபோன்ற வந்த துயரம், பெரியவாள் அநுக்ரஹமிருந்தால் பனிபோன்று விலகும் என்பதை மறுபடியும் அறிந்துகொண்டேன். இப்பொழுது, உஷா சென்னை போயிருந்தபோது நான் அவளைக் காஞ்சீபுரம் போய், பெரியவாளை தரிசித்துக் கொண்டுவா என்று சொன்னேன். அவளும் நான் போய்விட்டு வந்தேன் என்று சொன்னபோது நானே போய்வந்தது போல் உணர்ந்தேன்.